C.C 378/2013

PW 1

பெயர் பொன்ராஜ், த/பெ.கிருஷ்ணசாமி

தேதி 13.08.2024

**(1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.)**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சர்வே எண் 808/3 –( 2 ஏக்கர் 26 சென்ட்) என்றால் சரிதான். மேற்படி சொத்தினை நான் 2000ம் ஆண்டில் வாங்கினேன். தேதி ஞாபகம்இல்லை. பீதாம்பர சேர்வை என்பவருக்கு எத்தனை மனைவி என்பது எனக்கு தெரியாது என்றால், சரிதான். எனக்கு விற்பனை செய்த நபர் பீதாம்பர சேர்வையின் எத்தனாவது மனைவியின் வாரிசு என்று எனக்கு தெரியாது என்றால் ,சரிதான். பீதாம்பர சேர்வைக்கு மேற்படி சொத்து பூர்வீக சொத்து என்றால், இருக்கலாம். முதல் விசாரணையில் கூறியுள்ள 1996ம் ஆண்டு தான செட்டில்மெண்ட் பத்திரம் யார் யாருக்கு எழுதி வைத்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். மீராபாய் கலாவதிக்கு எழுதிக்கொடுத்த சொத்த தாவா சொத்தில் எந்த பகுதியில் கட்டுபட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 ஏக்கர் 70 சென்ட் நிலத்தை மீராபாய் முருகேசன் என்பவருக்கு எந்த தேதியில் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி கூறிய ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய கிரையத்திற்கு முன்பு ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நான் சரஸ்வதி மற்றும் சந்திரகலா ஆகியோரிடம் கிரையம் பெற்றேன். சரஸ்வதி மற்றும் சந்திரகலா ஆகியோர் என்னுடைய கிரையத்திற்கு முன்பு ஏற்பட்ட வில்லங்கள் சம்மந்தமாக என்னிடம் எதுவும் கூறவில்லை மறைத்துவிட்டார்கள். மேற்படி இருவரும் எனக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரத்தில் சொத்தில் வில்லங்கம் எதுவும் இல்லை என்றும், இருந்தால் அதை தீர்த்துக்கொடுப்பதாக காட்டி எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன்படி பார்த்தால் மேற்படி இருவரும் என்னை மோசடி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். புகாரில் கூறியுள்ள ஆவணங்களை உரிமையியல் நீதிமன்றம் மூலமாக ஆவணங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல் ஆவணங்களை ரத்து செய்ய பதிவுத்துறை மூலமாக நடவடிக்கை எடுக்க வில்லை என்றால் சரிதான். நான் தொழில் அதிபர் என்றால் சரிதான். விவசாயமும்

செய்கிறேன். மேற்படி சொத்தில் விவசாயம் செய்வது தொடர்பாக அடங்கல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறும் ஆவணங்கள் உரிமையியல் நீதிமன்றம் மூலம் ரத்து செய்யும் வரை உண்மையான ஆவணங்கள் என்றும், நான்தான் மோசடி எண்ணம் கொண்டு தாவா புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் கூறியுள்ள ஆவணங்கள் அனைத்தும் 30 ஆண்டுகள் கடந்தவை என்றால் சரிதான். சரஸ்வதி மற்றும் சந்திரகலா மீது முன் வில்லங்கங்களை மறைத்தது தொடர்பாக எந்த நடவடிக்கை நாளது வரை எடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் எதிரி முருகேசன் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொண்டதாக கூறியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பட்டா முருகேசன் பெயரில் உள்ளது என்றாலும், அது 27.08.1999 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது எதசாஆ 1 ஆகும். எதிரிகள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் தாக்கல் செய்த மேல்முறையீடு தள்ளுபடியாகிவிட்டது எனக் கூறியுள்ளேன். மேற்படி மேல்முறையீட்டு உத்தரவு தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ 2 ஆகும். மேற்படி உத்தரவில் உரிமையியல் வழக்கு எண் 288/2001 நிலுவையில் இருப்பதால் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் எனவே முருகேசன் தாக்கல் செய்த மேல் முறையீடு தள்ளுபடி செய்வதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும், மேற்படி உத்தரவில் OS 288/2001 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதை ரத்து செய்ய தாக்கல் செய்த IA No.334/2002 மனு கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருப்பதாக காட்டப்பட்டள்ளது என்றால் சரிதான். அதன்படி உரிமையியல் வழக்கு தீர்ப்பில் பார்த்துக்கொள்ளும்படி பொருள் கொண்டு உத்தரவில் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உரிமையியல் வழக்கில் நாளது வரை இறுதி முடிவு எட்டப்படாமல் உச்சநீதிமன்றம் மதுரை உயர் நீதிமன்றத்தை மீண்டும் விசாரிக்கும்படி உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பிற்கு மேல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கில் பிறப்பிக்கபட்ட தீர்ப்பு நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ 3 ஆகும். மேற்படி மேல்முறையீடு 1, 2 எதிரிகளுக்கு சாதகமாக தீர்ப்பு பிறபிக்கப்பட்டது என்றும் அதை எதிர்த்து நான் மதுரை உயர் நீதிமன்றத்தில் இரண்டாவது மேல் முறையீடு தாக்கல் செய்தேன் என்றும் மேற்படி இரவண்டாவது மேல் முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு நகல் என்னிடம்

காட்டப்படுவதுதான். அது எதசாஆ.4 ஆகும். அதில் 2 வழக்குகள் மறைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மீண்டும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யும்படி வழக்கு திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது OS 236/1996 மற்றும் OS 302/1998 என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளும் எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த சரஸ்வதி மற்றும் சந்திரகலா ஆகியோர் தாக்கல் செய்தது என்றால் சரிதான். அதே சொத்து சம்மந்தமாக OS 236/1996 என்ற வழக்கு மீராபாயின் தகப்பனார் ராமசாமி மீது போடப்பட்ட வழக்கு உத்தரவு என்றால் சரிதான். மேற்படி வழக்கில் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரப்பட்டு அது தள்ளுபடியான தீர்ப்பாணை நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ.5 ஆகும். OS 302/1998 வழக்கானது சந்திரகலா, சரஸ்வதி ஆகியோர் 1, 2 எதிரிகள் மீது தாக்கல் செய்த வழக்கு என்றும், அந்த வழக்கில் தள்ளுபடியான தீர்ப்பாணை நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது எதசாஆ.6 ஆகும். உயர் நீதிமன்ற உத்தரவை எதிர்த்த உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்தேன் என்றாலும், அதில் 21.03.2024 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படுவதுதான். அது எதசாஆ 7 ஆகும். மேற்படி உத்தரவில் மீண்டும் உயர் நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளும்படி பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி உயர் நீதிமன்றத்தில் இறுதி தீர்ப்பு பிறப்பித்தால்தான் சொத்தின் உரிமை பாத்தியம் குறித்து தெளிவாகும் என்றால் சரிதான். சொத்தை கிரையம் பெறும்போது நான் வில்லங்கம் பார்த்துதான் வாங்கினேன் என்றால் சரிதான். O236/1996, OS 302/1998 வழக்குகள் விபரத்தை சரஸ்வதியும் சந்திரகலாவும் என்னிடம் சொன்னபிறகுதான் சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். மேற்கூறிய வழக்குகளை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மீண்டும் விசாரணை செய்த முடிவு காணாமல் நானாக 1, 2 எதிரிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி மட்டும் வழக்கு தாக்கல் செய்து பொய்யாக எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட மில்லை ஒட்டி தாவா இடம் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான்கு மால் தெரியாது என்றால் சரிதான். நான் மிகப் பெரிய கோடீஸ்வரர் என்பதால் எதிரிகளை மிரட்டி சொத்தை பெறவேண்டும் என்பதற்காக பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்காலத்தில் நான் பெற்ற கிரையத்திற்கு முன்பு சொத்து சம்மந்தப்பட்ட

ஆவணங்களை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க நான் தயாராக இல்லை. எனது கிரையத்திற்கு முன்பு ஏற்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வேறு சில ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதால் என்னுடைய பரிகாரம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. தற்போதுதான் விசாரித்தார்கள். சொத்தின் சுவாதீனம் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ள எனது ஆவணங்கள் தவிர மற்ற ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.